[1968 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அரசாங்கப் பண்ணைகளில் பணி புரிகிறவர்களுக்கு எப்போதும் வேலை கொடுக்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அவசியமானால் வைத்துக் கொள்வார்கள், அவசியமில்லை என்றால் வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். ஆகவே கூலி உயர்வு பற்றிய பிரச்னை வருவதற்கு இடமில்லை. மற்றபடி அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போன்று 12 கோரிக்கைகள் இருக்கின்றன. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்.

திரு. எம். பூபதி: பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தப் பிரச்னை எப்போது முடியும்? ஏனெனில் ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆகவே அதை உடனடியாக முடிக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சில பிரச்னைகள் உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்னைகளாக இருக்கின்றன. சம்பள விகித உயர்வு என்றிருப்பதால் அதைப்பற்றி பரிசீலனை செய்த பிறகு தான் முடிந்த கட்டத்திற்கு வர முடியும். விரைவில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்.

திரு. பி. வேலுசாமி: விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலி எவ்வளவு என்று நிர்ணயிக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

DR. H. V. HANDE: Sir, how many employees are there in this department? The Minister said that there were twelve grievances. Will he be pleased to state the most important grievances or, if possible, all the twelve grievances?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி விவரமாக சொல்லவேண்டுமென்றால் சபாநாயகர் அவர்களின் அனுமதி கிடைக்காது. நேற்றே ஒரு தடை உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். முழு விவரம் வேண்டுமானால் தனியாக எழுதிக் கேட்கலாம்.

முறைப்படுத்தப்பட்ட சந்தைக் குழு

* 71 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய விளை பொருள் ஒழுங்கு மார்க்கெட் கமிட்டி (Agricultural Produce Regulated Marketing Committee) ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம், இச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

1968 ஆகஸ்ட் 21]

திரு. கொளத்தூர் கோதண்டம்: தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தற்போது இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டீஸ் இருக்கின்றன? அப்படி ஒன்று ஆரம்பிக்க வேண்டுமானால் அதற்கான அடிப்படைத் தேவைகள் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பொதுவாக எந்தெந்த மாவட்டங்களில் பணப் பயிர்கள் விளைகின்றனவோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த மார்க்கெட்டிங் கமிட்டி துவக்கப்படுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. செங்கல்பட்டுக்கு வரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. திருச்சியில் இருக்கிறது, கோவையில் இருக்கிறது. பணப் பயிர்கள் விளைகின்ற மாவட்டங்களில் எல்லாம் இந்தக் கமிட்டி துவங்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் காலம் கடந்ததற்குக் காரணம் சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் கமிட்டீஸ் இருப்பதால் அதை நீக்கிவிட வேண்டுமென்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை நீக்கக்கூடாது, ஒரே முறை இருக்க வேண்டுமென்று இப்போது மறு பரிசீலனை செய்து ஏற்கனவே நாமினேட் செய்யப்பட்டவர்கள் நிலையை மாற்றியமைக்க அரசாங்கம் கொஞ்சம் காலம் எடுத்துக் கொண்டது. ஆகவே கால தாமதம்.

திரு. மா. பா. சாரதி: இந்த மார்க்கெட்டிங் கமிட்டியில் பெரும்பாலும் நிலக்கடலை ஒன்றுதான் அங்கு வருகிறது. ஆகவே மற்றப் பொருள்களான மிளகாய் வத்தல், வெல்லம் போன்ற பொருள்களையும்கூட இதன் கீழ் கொண்டுவந்து விற்பனை செய்ய சர்க்கார் முயன்று துரித நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மிளகாய், வெல்லம், பருத்தி போன்ற பொருள்களையும் மார்க்கெட்டிங் கமிட்டிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். அப்படி அந்தப் பொருள்கள் மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் சில வியாபாரிகள் தனிப்பட்ட முறையில் தங்களுக்கு ஆதாயம் கிடைப்பதில் இடையூறு இருக்கிறது என்று அப்படி மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் வசதி கிடைக்காது என்று கூறி, குறுக்கே நிற்கிறார்கள். மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் நல்லமுறையில் நியாயமான விலை கிடைக்கும் என்பதை சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரசாரம் செய்தால் இந்தப் பொருள்கள் எல்லாம் அங்கு வருவதற்கு வழி ஏற்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: நெல் பயிர் போன்றவை கூட இந்த ரெகுலேடட் மார்க்கெட்டிங் ஆக்ட்டின் கீழ் வருகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நெல்லும் அதில்தான் வந்தது. அதில் ஒரு பிரச்னை எழுந்தது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நெல்லையும் கொண்டுவரவேண்டுமென்பதுதான் அரசாங்கம் கருதுகிறது. அதற்கு ஓர் எதிர்ப்பு இருப்பதால் அது பரிசீலனையில் உள்ளது.